குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண்.178/2022

அ.சா.3

2025–ம் ஆண்டு ஜனவரி 29–ம் தேதி புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாது | ஜாதி | |
| தந்தை பெயர் | பழனியப்பன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.35 மணி,

Accused Thangaraj Present. Advocate Mr.P.Gopal present for accused. APP Mr.P.Suresh present.

**முதல் விசாரணை :**

**1.** நான் மாரமங்கலத்துப்பட்டியில் குடியிருந்து, பெயிண்டிங்க் வேலை செய்து வருகிறேன். கடந்த 23.10.2019 ஆம் தேதி, நானும், சம்பத்குமார் என்பவரும், சேவகனூர் – குன்றத்துமேடு செல்லும் சாலையில் சென்றபோது, குன்றத்துமேடு என்ற இடத்தில் இருந்து நான்கு ரோடு சந்திப்பில் விபத்து நடந்தது. விபத்தில் காயமடைந்த நபரை ஆம்புலன்ஸ் மூலமாக எடுத்துச் சென்றார்கள். அதன்பின்பு போலிசார் வந்து அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். மதியம் 03.00 மணியளவில் விசாரணை செய்து, என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. ( **அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**2.** நானும் சம்பத்குமாரும் சம்பவ இடத்திற்கு சென்றபோது, போலிசார் அங்கு இருந்தார்கள் என்றால் சரி. அப்போது சம்பவ இடத்தில் சுமார் 10 – 15 நபர்கள் இருந்தார்கள். நான் விபத்தில் இறந்த செல்லப்பனுக்கு உறவினர் என்றால் சரியல்ல.

போலிசார் வரைபடம் வரைந்து என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் என்றால் சரி. பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரி. நான், விபத்தில் இறந்த செல்ப்பனின் உறவினர் என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 01.41 மணி,

ஒம்/—ச.ஷர்மிளா,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

ஓமலூர்.